செ.வெ.எண்: 25/2021 நாள்: 24.05.2021

**பத்திரிக்கை செய்தி**

**தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.கீ.சு.சமீரன்,இ.ஆ.ப.,அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையின் படி கொரோனா நோய்த்தொற்று பரவலை கட்டுப்படுத்த 24.05.2021 முதல் ஒரு வார காலத்திற்கு முழு ஊரடங்கு எவ்வித தளர்வுகளும் இன்றி நடைமுறைப்படுத்தப்படும். இந்த முழு ஊரடங்கு காலத்தில் மருந்தகங்கள், நாட்டு மருந்துக்கடைகள், கால்நடை மருந்தகங்கள், பால் விநியோகம், குடிநீர் மற்றும் தினசரி பத்திரிக்கை ஆகியவை அனுமதிக்கப்படும். இவை தவிர வேறு எந்த கடைகள், மால்கள் மற்றும் சாலையோர கடைகள் இயங்குவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு தேவையான காய்கறிகள், பழங்கள் ஆகியவை தோட்டக்கலைத்துறை, வேளாண்துறை மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து வாகனங்கள் மூலம் அந்தந்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்கே நேரடியாக விநியோகம் செய்யப்படும். இதனை பொது மக்கள் பயன்படுத்தி கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மக்கள் அவசியமின்றி வீட்டில் இருந்து வெளியே வருவதையும், கூட்டங்களையும் தவிர்க்க வேண்டும். நோய்த்தொற்று அறிகுறிகள் தென்பட்டால் உடனே அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடி ஆலோசனை மற்றும் சிகிச்சை பெற வேண்டும் என தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.கீ.சு.சமீரன்,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**